நாள். 26.03.2024
எம்.சி.ஓ.பி எண். 3793/2021
ம.சா. 1
பெயர். விஜயா
க/பெ.திரு. வீரசுந்தரம்
வயது. 45

**2ஆம் மற்றும் 4 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான்தான் காவல்நிலையத்தில் விபத்து பற்றி புகார் கொடுத்தேன். விபத்து 11.15 மணிக்கு நடந்தது. நான் கொடுத்த புகாரில் கார் ஓரமாக நின்று கொண்டிருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது. எனது கணவர்தான் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்ட தெரியாமல் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தலையில் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் தலைகவசம் அணியவில்லை. முதல் தகவல் அறிக்கை 3ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வாகனத்திற்கு காப்பீடு 13.10 மணிக்கு எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடு 3ஆம் நபர் இழப்பீடு காப்பீடு ஆகும். காரை பொறுத்தவரை இழப்பீடு கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. ஈசர் வாகனத்திற்கு காப்பீடு நடை முறையில் இல்லை என்பதால் 4ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க முடியாது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கணவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. எனது கணவரின் தொழில் மற்றும் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீட்டிற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யததால் நான் கேட்டுள்ள இழப்பீடு கிடைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. மனு 2 மற்றும் 4 ஆம் எதிர் மனுதாரர்களை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.